**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : STC.717/2022**

**Prosecution witness : அ.சா.1 Date : 24.05.2023**

| | |
|---|---|
| **Name : கந்தசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வீரனூரில் குடியிருந்து விவசாயம் செய்கிறேன். இந்த விபத்தில் இறந்தவர் எனது மகன். கடந்த 06.02.2022-ம் தேதி எனது மகன் எலக்ரீசியன் வேலை செய்வதற்காக எனது வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தில் ஆர்.எஸ் வந்தார். அன்றையதினம் மாலை 4 மணிக்கு Hero Honda Passion வண்டியில் மேட்டுர் செல்வதாக கூறிக்கொண்டு சென்றவர் மேட்டுர் பழைய ஆப்பீஸ் அருகே சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு ஆம்புலன்ஸ் டிரைவர் அழைத்து சொன்னார்.

2) பின்னர் எனது மகனுக்கு தலை, மற்றும் கணுக்காலில் காயம் ஏற்பட்டு மேட்டுர் அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை செய்துகொண்டு, பின்னர் சேலம் அரசு மருத்துவனைக்கு சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் இதுகுறித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார்மனுவில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார்மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-இல்லை**

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : STC.717/2022**
**Prosecution witness : அ.சா.2 Date : 24.05.2023**

| **Name : சுதாகர்** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வீரனூரில் குடியிருந்து டிரைவர் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தகப்பனார். இந்த விபத்தில் இறந்தவர் எனது அண்ணன். கடந்த 06.02.2022-ம் தேதி எனது அண்ணன் வேலை விசயமாக TN-30-0727 என்ற இருசக்கர வாகனத்தில் மாலை 4 மணிக்கு Hero Honda Passion வண்டியில் மேட்டுர் பழைய ஆர்டிஓ ஆப்பீஸ் அருகே சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 எனக்கு அழைத்து சொன்னார்.

2) பின்னர் எனது அண்ணனுக்கு தலை, மற்றும் கணுக்காலில் காயம் ஏற்பட்டு மேட்டுர் அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை செய்துகொண்டு, பின்னர் சேலம் அரசு மருத்துவனைக்கு சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-இல்லை**

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : STC.717/2022**
**Prosecution witness : அ.சா.3** **Date : 24.05.2023**

| | |
|---|---|
| **Name : மகாராஜன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

முதல் விசாரணை

1) நான் வீரனூரில் குடியிருந்து கட்டிட வேலை செய்கிறேன். அ.சா.1 எனது அண்ணன். இந்த விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் மகன். கடந்த 2022-ம் ஆண்டு எனது அண்ணன் மகன் இருசக்கர வாகனத்தில் மேட்டுர் பழைய ஆர்டிஓ ஆப்பீஸ் அருகே மேட்ர் ரயில் நிலையம் அருகே சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த பால் வண்டி லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 எனக்கு அழைத்து சொன்னார்.

2) பின்னர் அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு மேட்டுர் அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை செய்துகொண்டு, பின்னர் சேலம் அரசு மருத்துவனைக்கு சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நான் பிணவறையில் வந்து பார்த்தேன். போலிசார் பிரேத பரிசோதனை செய்தபோது நான் அங்கு இருந்தேன். இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-இல்லை

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**